1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்படுகிற போது பதிவு செய்யப்படுகிறது. சில நேரங்களில் இடைப்பட்ட நிலங்களும் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவை பதிவுக்கு வருவதில்லை. இப்போது மேலேயோ அல்லது கீழேயோ இருக்கக் கூடிய நஞ்சை நிலங்களின் ஆயக்கட்டுதாரர்களுடைய தயவிலே அவர்கள் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. அதை எல்லாம் மறு பரிசீலனை செய்து தான் புதிய உத்திரவு போடுவதை அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

அரியலூர் தொகுதியிலுள்ள கண்டிரா தீர்த்தம் ஏரியின் உள் வாயிலில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள்

* வினா எண். 311—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியிலுள்ள கண்டிரா தீர்த்தம் ஏரியின் உள் வாயிலில் தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இவ்வேரியின் உள் வாயிலில் 11 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். இதில் 10 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன. மீதமுள்ள ஒரு நபர் ஏரியில் உள்ள ஒரு மாமரத்தை ஆக்கிரமித்துள்ளார். அதையும் அகற்றி, அந்த மரத்தை விதி முறைகளின்படி பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. த. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கண்டிரா தீர்த்த ஏரியில் 11 பேர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த ஏரியின் விஸ்தீரணம் எவ்வளவு ? ஆக்கிரமிப்பு இன்னும் அகற்றப்படவில்லை. துரித நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அந்த விஸ்தீரணம் பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால் ஆக்கிரமிப்பு எல்லாம் அகற்றப்பட்டு இருப்பதாக இப்போது தகவல் தரப்பட்டிருக்கிறது. அது குறித்து ஏதாவது ஐயப்பாடு இருக்குமானால் மீண்டும் விசாரித்து பதில் சொல்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் எல்லா ஏரிகளின் உள்வாயில்களிலும் ஆக்கிரமிப்பு நிகழ்ந்திருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளின் விளைவாக ஏரிகளில் நிற்கக்கூடிய தண்ணீரின் அளவு குறைந்து விவசாயத்திற்கு பாசனத்திற்கு போதுமான நீர் கிடைக்கவில்லை என்ற புகார் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கிறது. ஆகவே அரசாங்கம் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இப்போது ஏரி, குளங்களின் உள் வாயில்களில் ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அதை அகற்றி வனத்துறையிடம் நாம் ஒப்படைத்து விடுகிறோம். அவர்கள் அந்த உள் வாயில்களில் கருவேல மரம் போன்றவற்றைப் பயிரிடுகிறார்கள். அதன் பிறகு விவசாயிகள் உள்ளே வந்து ஆக்கிரமிப்பதற்கு வாய்ப்பு தடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 30 சதவீதம் குளங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பருவ காலத்திலேயும் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

சக்தி—தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில்
வசிக்கும் ஆதிவாசிகள்

*வினா எண். 238 —திரு. கு. ரமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் தாலுகா சக்தி—தலைமலை வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதிகளில் முகாம்களில் (செட்டில்மெண்டுகள்) வசித்து வருகிற ஆதிவாசிகளுக்கு கல்வி உறைவிடப்பள்ளி, சுகாதாரம், குடிநீர் கிணறுகள், மின்விளக்குகள், கூட்டுறவு கடனுதவி போன்ற எந்த வசதியுமில்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆமெனில் மேற்படி வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எகடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ; (அ) இதுபற்றிய விவரங்கள் சேகரிகபட்டுள்ளன.

(ஆ)க்அ சியமான தேவைகளைச் செய்து கொடுக்க தக்க நடவடிகைகுத்யுவகாள்ளப்படும்.